DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT/SPECIAL COURT UNDER E.C ACT CASES, THANJAVUR

S.C.No. -378/2025

Prosecution PW -2

| | | | |
|---|---|---|---|
| Name | திரு.கழனியப்பன் | Occupation | |
| Husband/Father Name | | Village | |
| Taluk | | Age | |
| Date | 25.03.2026 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873

Accused A1 to A5 present.

(This evidence is recorded through Video Conference by using Teams Application. The witness is being in the remote site at Principal District Court, Mayiladuthurai and who is co-ordinated by the Thiru.Rajkamal, System Analysist, Cheif Principal District Court, Mayiladuthurai and this court is satisfied that the witness is not at all tutored by any body. The witness is identified by police. The Co-ordinator is directed to download this depostion and to get signed by the witness and the co ordinater and the original shall be returned to this court through post and the scanned and signed deposition shall be sent to the court's e – mail ID)

<u>முதல் விசாரணை</u>

நான் தற்பொழுது மயிலாடுதுறை மாவட்டம் திருவெண்காடு காவல்நிலைய ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 20.02.2020ம் தேதி தஞ்சாவூர் தாலுகா காவல் நிலைய ஆய்வாளராக பணியிலிருந்தபோது, காலை 8.00 மணியளவில் என்னுடன் உதவி ஆய்வாளர் பார்த்தசாரதி, சிறப்பு உதவி ஆய்வாளர் முத்துவேல், இரண்டாம் நிலை காவலர் சிற்றரசு ஆகியோருடன் குற்றத்தடுப்பு சம்பந்தமாக தஞ்சாவூர் தாலுகா காவல்நிலைய எல்லைக்குட்பட்ட பகுதியில் ரோந்து அலுவலில் இருந்தபோது, எனது இரகசியத் தகவலாளி பனங்காடு மேட்டுத்தெருவில் 6 பேர் பயங்கர ஆயுதங்களுடன் வட்டமாக உட்கார்ந்து கொண்டு ஏதோ கொள்ளையடிக்க திட்டம் தீட்டுவதாக தெரியவருவதாக கூறிய தகவலின் பேரில் நான் போலிஸ் பார்ட்டியுடன் 8.00

மணிக்கு சம்பவ இடமான பனங்காடு மேட்டுத்தெருவில் சென்று கண்காணித்தபோது அங்கு 6 நபர்கள் வட்டமாக உட்கார்ந்து கொண்டு பயங்கர ஆயுதங்களுடன் பேசிக்கொண்டிருந்தார்கள் அவர்கள் பேசியதை நாங்கள் கவனிக்க, எங்காவது கொள்ளையடித்து அந்த பணத்தை வைத்து பெரிய ஆளாக வரவேண்டும் என்று பேசி திட்டமிட்டுக் கொண்டிருந்தவர்களை சுற்றி வளைத்து பிடிக்க அதில் ஒருவர் தப்பி ஓடிவிட்டார். பிடிபட்டவர்களிடம் 1 கம்பி, அருவாள்-1, கட்டை-4 ஆகிய கொடிய ஆயுதங்கள் இருந்தன. அவர்களுடைய பெயர் முகவரியை விசாரிக்க அடிக்கடி குற்ற செயல்களில் ஈடுபடும் விக்னேஷ்வரன், திவாகர், பிரவின்குமார், நந்தகுமார், செல்லப்பா என்று பெயர் விலாசத்துடன் கூறினார்கள். தப்பி ஓடியவர் குறித்து விசாரிக்க அவர் பெயர் தமிழரசன் என்று பெயர் விலாசத்துடன் கூறினார்கள். அவர்களை குற்ற காரணம் கூறி 8.00 மணிக்கு கைது செய்து 1வது எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தினை சாட்சிகள் முத்துவேல், சிற்றரசு முன்னிலையில் பதிவு செய்தேன். பின்னர் எதிரிகள் வைத்திருந்த தடயப்பொருள்களை அதே சாட்சிகள் முன்னிலையில் மகசரில் கைப்பற்றினேன். அந்த கைப்பற்றுதல்மகசர் ஏற்கனவே அதசாஆ.1 ஆகவும், தடயப்பொருள்கள் சா.பொ.1 முதல் 3 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது. பின்னர் எதிரிகள் மற்றும் தடயத்துடன் 10.00 மணிக்கு நிலையம் வந்து நிலையக் குற்றஎண். 37/2020 இதச பிரிவு 399 ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். அந்த முதல்தகவல்அறிக்கை அதசாஆ**.2**. பின்னர் 11.00 மணிக்கு மீண்டும் சம்பவ இடம் சென்று தனிநபர் சாட்சிகள் ரமேஷ், மதி முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். பார்வை மகசர் அதசாஆ**.3.** மாதிரி வரைபடம் அதசாஆ**.4.** பின்னர் எதிரிகள் மற்றும் தடயச்சொத்தினை நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன். பின்னர் சாட்சிகள் பார்த்தசாரதி, முததுவேல், சிற்றரசு, ரமேஷ், மதி ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து இத்துடன் என் விசாரணையை முடித்து 1 முதல் 5 எதிரிகள் மீது இதச பிரிவு 399 ன் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

<u>குறுக்கு விசாரணை எதிரிகள் தரப்பில்</u>

சம்பவ இடத்தில் அனைத்து நடவடிக்கைகளையும் முடித்து காவல் நிலையம் வந்து தான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன் என்றால் சரிதான். எனக்கு இரகசியத் தகவல் வந்ததும் 8.00 மணி, எதிரிகளை கைது செய்ததும் 8.00 மணி என்றால் சரிதான். கைப்பற்றுதல் மகசரில் குற்ற எண், சட்டபிரிவுகள்

குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். சம்பவ இட்த்தில் தயாரிக்கப்பட்ட ஒப்புதல் வாக்குமூலம் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அது எந்த இடத்தில் தட்டச்சு செய்யப்பட்டு பிரிண்ட் எடுக்கப்பட்டது என்று வழக்கில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். 20.02.2020 ல் கைப்பற்றப்பட்ட தடயப்பொருள் 05.03.2020 ல் தான் நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். கைப்பற்றுதல் மகசரில் 1 வது எதிரியிடமிருந்து தான் தடயப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது என்றால் சரிதான். தனிநபர்களை சாட்சிகளாக சம்பவஇடத்திற்கு அழைககவில்லை என்றால் சரிதான். எதிரிகளை சொன்ன, நாள், நேரம் இடத்தில் கைது செய்யவில்லை என்றாலும், எதிரிகள் எந்தவித ஆயுதங்களையும் வைததிருக்கவில்லை என்றாலும், கொள்ளயடிக்க திட்டமிடவில்லை என்றாலும், எதிரிகள் மீது புள்ளிவிவர கணக்கிற்காக பொய் வழக்கு போட்டு அதற்கு அனுசரனையாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

நான் சொல்ல என் உத்தரவுபடி தட்டச்சிடப்பட்டு
என் முன்னிலையிலும், மேற்பார்வையிலும் சாட்சிக்குப் படித்து
காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று ஒப்புக்
கொள்ளப்பட்டது.

ஒம்/-...ஜி.சுந்தரராஜன்,
கூடுதல் மாவட்ட (ம) அமர்வு நீதிபதி,
இன்றியமையாப் பண்டங்கள் சட்ட சிறப்பு நீதிமன்றம்,
தஞ்சாவூர்